10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 195 செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 05 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## கடலுக்கு செல்லாதீர்!

யாழ்ப்பாணம், டிசெ.05

வடக்கு, கிழக்கு, தென் மாகாணங்களைச் சேர்ந்த மீனவர்களையும் மக்களையும் இன்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

அந்தமான், வங்காள விரிகுடா கடல்களில் உருவாகியிருக்கும் காற்றழுத்தத் தாழ்வு மையம் வலுப்பெற்று வருகிறது. இதனால் கடும் கடல் கொந்தளிப்பு இருக்கும். காற்றும் பலமாக வீசுவதுடன் கடும் 06

## இரு இளைஞர்கள் மீது சரமாரி வாள்வெட்டு

சாவகச்சேரி, டிசெ. 05

தென்மராட்சியின் மீசாலையில் இரு இடங்களில் இடம்பெற்ற சரமாரி வாள் வெட்டுச் சம்பவங்களில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த இரு சம்பவங்களும் நேற்றிரவு 7. 30 மணியளவில் சிறிது நேர இடைவெளியில் இடம்பெற்றுள்ளன.

மீசாலை கிழக்கு - மதுவன் சனசமூக நிலையத்துக்கு அண்மையாக உள்ள கடை ஒன்றினுள் புகுந்த அறுவர் கொண்ட குழு அங்கு நின்ற இளைஞனை சரமாரியாக வாளால் வெட்டியது. பின்னர் கடை 06

## தூங்கிய வழக்குகளை துரிதப்படுத்திய நீதிபதி

### இரு வருடங்களுக்குள் தீர்ப்பிட இளஞ்செழியன் முடிவு



யாழ்ப்பாணம், டிசெ.05

யாழ்ப்பாணம்-மேல்நீதிமன்றில் கிடப்பில் உள்ள வழக்குகளைத் துரிதப்படுத்தி அடுத்த இரண்டு வருடங்களுக்குள் தீர்ப்பினை வழங்க வுள்ளதாக மேல்நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.

யாழ்.மேல் நீதிமன்றில் பாரிய குற்றங்கள் தொடர்பான 50 வழக்குகளை 06




## மாவீரர் துயிலுமில்லம் தாவரவியல் பூங்காவானது

### கனகபுரத்தில் திடீர் பெயர்ப்பலகை

கிளிநொச்சி, டிசெ.05

அண்மையில் மிகவும் உணர்வு பூர்வமாக மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்ட கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லத்தில் தாவரவியல் பூங்கா என்ற பெயர்பலகை நேற்றுத் திடீரென நாட்டப்பட்டுள்ளது. குறித்த பெயர்ப் பலகையை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையே நிறுவியுள்ள 06

# "பூ"வில் புதிய கூட்டணி மலரும் சாத்தியம்?

### த.தே.ம.மு. – ஈ.பி.ஆர்.எல்.எவ். பேச்சுக்களில் மும்முரம்




யாழ்ப்பாணம், டிசெம்பர் 05

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சுரேஸ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் புதிய கூட்டணிக்கான பேச்சுக்களை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர் என உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இரு கட்சிகளுக்கும் இடையில் பொது அமைப்புகளின் ஒத்துழைப்புடன் புதிய கூட்டணியை உரு 06

## யாழ்–கொழும்பு பஸ்கள் மீது சோதனை மேல் சோதனை!



யாழ்ப்பாணம், டிசெ.05

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபட்ட பஸ்கள் அனைத்தும் நேற்றிரவு திடீர்ச் சோதனைக்குட்படுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

கொழும்பு நோக்கிப் பயணிக்கும் 06

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்த உத்தரவிடுங்கள்

### பவ்ரல் அமைப்பு வழக்குத் தாக்கல்

கொழும்பு, டிசெ. 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கக் கோரி பவ்ரல் அமைப்பால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையை ஈவா வனசுந்தர, சிசிர டி ஆப்றூ, மலல்கொட ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

"தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை அரசு விடுத்துள்ள போதும் அதனை தாமதப்படுத்த பல தரப்பினர் தயாராகி வருகின்றனர். உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நீண்டகாலமாக நடத்தப்படவில்லை. இது மக்களின் உரிமையைப் பறிக்கும் செயற்பாடு. எனவே இனியும் தாமதப்படுத்தாது உள்ளூ 06

## உதயன் செய்தி பச்சைப் பொய்

### விரைவில் சட்ட நடவடிக்கை; அமைச்சர் அனந்தி ஆவேசம்



"அடிப்படை ஆதாரம் ஏதுமின்றி உண்மைக்கு மாறாக செய்தி வெளியிட்டிருக்கும் உதயன் நாளிதழின் செயல் ஊடக தர்மத்தை கேள்விக்கு உள்ளாகியுள்ளது. உண்மைக்கு மாறான செய்தியை வெளியிட்டதன் மூலம் எனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்திய உதயன் நாளிதழ் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என வடக்கு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். 06



## உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# யாழில் ஒரே நாளில் நான்கு கொள்ளைகள்

## அரைப்பவுண் அறுப்பு

வடமராட்சி, டிசெ.05

கடைக்குப்பொருள்வாங்கச்சென்ற, மூதாட்டியின் அரைப்பவுண் தங்கச் சங்கிலியை கொள்ளையர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத் துக்கு அருகிலேயே நேற்றுக்காலை 10.30 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் வசிக்கும் 60 வயதான மூதாட்டி வழக்கம் போல கடைக்குப் பொருள் வாங்கச் சென்றுள்ளார். அப்போது அவரின் பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள், அவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு சிட்டாகப் பறந்தனர். இது குறித்து நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-11)

## உதவி கேட்டவர்கள் பிடுங்கினர் பணத்தை



வடமராட்சி, டிசெ.05

வீதியால் சென்றவரிடம் உதவி கேட்பது போல நடித்தவர்கள், பின்னர் அவரிடமிருந்த பணத்தைப் பிடுங்கிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள மதவடி ஒழுங்கைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த பொன்னையா நடராஜா (வயது-60) என்ற வயோதிபர் மாடு கட்டுவதற்காகச் சைக்கிளில் சென்றுள்ளார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், தம்மைப் பொலிஸார் பிடித்ததாகவும், அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க அவசரமாக 500 ரூபா தரும் படியும் பவ்வியமாகக் கேட்டுள்ளனர். ஆயினும் வந்தவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டதால், தன்னிடம் பணம் எதுவுமில்லை என முதியவர் மறுத்துள்ளார். உடனே அந்த இருவரும், முதியவரைக் கீழே தள்ளி விழுத்தி, அவரிடமிருந்த ஒரு தொகைப் பணத்தை அபகரித்துச் சென்றனர். ஆயினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட முதியவர், தன்னிடம் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடியவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அவதானித்து, நெல்லியடிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-11)

## பட்டப் பகலில் பறிபோன தாலி

மருதனார்மடம், டிசெ.05

பஸ்ஸுக்காகக் காத்திருந்த குடும்பப் பெண்ணின் தாலி பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளைர்களால் அபேஸ் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமாலை, இணுவில்புகையிரத நிலையத்துக்குச் சமீபமாக மருதானர்மடம்-உரும்பிராய் வீதியில் குறித்த பெண் பஸ்ஸுக்காகக் காத்திருந்தார். அப்போதே மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள், அந்தப் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியை கண்ணிமைக்கும் நேரத்தில் அறுத்தெடுத்துச் சென்றனர். உடனேயே அந்தப் பெண்மணி கூக்குரலிட்ட போதும், உதவிக்கு மற்றையவர்கள் வருவதற்கிடையில் திருடர்கள் மாயமாகி விட்டனர். இது குறித்து சுன்னாகம் பொலிஸிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)


## கைப்பையோடு ரூ.50000 போனது

வடமராட்சி, டிசெ.05

மரக்கறி வாங்கச் சந்தைக்குச் சென்றவர் 50 ஆயிரம் ரூபாவோடு கைப்பையையும் பறிகொடுத்தார்.

இமையாணன், மண்டானைச் சேர்ந்த 60 வயதான முதியவர் ஒருவர் வங்கியில் 50 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு சந்தைக்குச் சென்றுள்ளார். கைப்பையில் பணத்தையும், வங்கிப் புத்தகத்தையும் பத்திரமாக வைத்துவிட்டு, மரக்கறியை வாங்கிக் கொண்டு அவர் திரும்பிய போது, கைப்பையைக் காணவில்லை. இதனையடுத்து அவர் அங்கு தேடியபோதும் மாயமான கைப்பையும், பணமும் கிடைக்கவில்லை.

இது குறித்து அவர் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (அ-11)



## சுயேட்சையாக களமிறங்கும் கருணா

கொழும்பு, டிசெ. 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேட்சையாகக் களமிறங்கத் தீர்மானித்துள்ளதாகவும், எந்தவொரு பெருங் கட்சியினுடனும் சேர்ந்து செயற்படும் முடிவைத் தாம் எடுக்கவில்லை எனவும் முன்னாள் பிரதி அமைச்சர் கருணா நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்.

"எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுயேச்சையாகவே எதிர்கொள்ளவுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து போட்டியிடும் சிறுபான்மைக் கட்சிகளில் எமது கட்சியில்லை எனவும், எமது கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி இதுவரை பதிவு செய்யப்படாத காரணத்தினால், இந்த முறை தேர்தலில் சுயேச்சையாகக் களமிறங்கத் தீர்மானித்துள்ளோம். மேலும், எதிர்வரும் தேர்தலில் எமது பலத்தை நிரூபிக்க நாங்கள் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மக்கள் எங்களை நிச்சயமாக ஆதரிப்பார்கள்" என்றும் கருணா நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## மாட்டினர் மரம் தறித்தோர்

மன்னார், டிசெ.05

மன்னார் பூமலந்தான் வனப் பகுதியில், நீண்டகாலமாகச் சட்டவிரோதமான முறையில் மரங்களைத் தறித்து வர்த்தகம் செய்த மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். மரம் தறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த உபகரணங்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள்தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கள்ள மணலுக்கு அபராதம் 50 ஆயிரம்

வடமராட்சி, டிசெ.05

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த லொறிச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

மணற்காட்டில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றினை குடத்தனை பகுதியில் வைத்து, கடந்த நவம்பர் 16 ஆம் திகதி காங்கேசன்துறை போதைபொருள் பிரிவினர் மடக்கியிருந்தனர். பின்னர் குறித்த லொறியையும், சாரதியையும் அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

குறித்த லொறிச் சாரதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போதே அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (அ-11)

## கரவெட்டியில் நேற்று பரிசிலும், கௌரவிப்பும்



கரவெட்டி, டிசெ.05

2017ஆம் ஆண்டில் பரீட்சைகளில் சாதித்த மாணவர்களுக்கான சிறப்பு பரிசில்களும், கலாமணி பட்டம் பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் மத்தொனி கிராம அபிவிருத்தி சங்கத்தினால் நேற்று நடத்தப்பட்டது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேசெயலர் க. சிறிமோகனனும், சிறப்பு விருந்தினர்களாக அ. வினோராஜ், மத்தொனி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.சிறிகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (அ-11)

## நோயாளிகளைப் பார்க்க இருவருக்கே இனி அனுமதி

### போதனா வைத்தியசாலையில் புதிய நடைமுறை



யாழ்ப்பாணம், டிசெ.05

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளைப் பார்வையிடுவோருக்கு புதிய வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஒரு நோயாளியைப் பார்வையிடுவதற்கு இரண்டு பேருக்கு மட்டும் அனுமதி வழங்க வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது. தற்பொழுது டெங்கு மற்றும் ஏனைய தொற்றுக்களினால் யாழ். போதனா வைத்தியசாலையில் 1200 க்கும் மேற்பட்ட நோயாளிகள், சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களைப் பார்வையிட வரும் உறவினர், நண்பர்களினால் வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள், வைத்தியசாலை நிர்வாகத்துக்குத் தெரிவித்தனர். குறிப்பாக அவசர சிகிச்சைகளை வழங்குவதில் சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து நோயாளிகளைப் பார்வையிட வருவோரை வரையறுக்கும் நோக்கில் ஒரு நோயாளியைப் பார்வையிடுவதற்கு இரண்டு பேருக்கு மட்டும் அனுமதி வழங்க வைத்தியசாலை நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதற்கென விசேட அனுமதி அட்டை ஒன்றையும் வழங்க வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 05 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# காலத்தின் அழைப்பு

உள்ளூராட்சித் தேர்தல்கள் உண்மையில் கட்சிகளின் பலப்பரீட்சைக்கான களமல்ல. ஆயினும் தங்கள் பலம், பலவீனம் என்பவற்றை எடை போட்டுக் கொள்ளவும், தங்களின் அடுத்த கட்டத் தலைமைகளைக் கண்டுப்பிடிக்கவும் உள்ளூராட்சி மன்றங்களே இந்தக் கட்சிகளுக்கு உதவப்போகின்றன.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நெடுந்தீவு, வேலணை, யாழ்.மாநகரசபை தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்களை வடக்கில் தன் வசமாக்கியிருந்தது. இதன் மூலமே அதன் கட்டமைப்பு மக்களிடம் ஆழ வேரூன்றி, கட்சியைப் பலமானதாக மாற்ற முடிந்தது. ஒவ்வொரு பிரதேசத்திலும், ஓரளவு அதிகாரத்தோடு கூடிய பிரதிநிதிகளின் மூலம் தன் அடித்தளத்தைச் செப்பனிட்டதோடு, நிரந்தரமான வாக்கு வங்கியையும் கூட்டமைப்பு உருவாக்கிக் கொண்டது.

அந்த விதைப்பின் விளைச்சலே, மாகாணசபைத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் கூட்டமைப்பு பெற்ற அசுர வெற்றிகள். ஈ.பி.டி.பி. கூட கூட்டமைப்பு ஆதரவு அலைக்கு முன்னால் தாக்குப் பிடித்து ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கும் கடந்த காலங்களில் அந்தக் கட்சி உள்ளூராட்சி மன்றங்களூடாகக் கட்டியெழுப்பியிருந்த, பிரதேச மட்ட வாக்கு வங்கிகள் தான். ஆனால், கடந்த உள்ளூராட்சித் தேர்தலையும், மாகாண சபைத் தேர்தலையும் புறக்கணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இளைஞர்களிடத்தே பேராதரவு பெற்றிருந்தும் தேர்தலில் எதிர்பாராத வகையில் மீண்டும் மூக்குடைபட்டதும், பிரதேச மட்ட வாக்கு வங்கிகள் இல்லாமையாலேயே.

இப்படிப்பட்ட நிலையில் தான் அரசியலில் ஆர்வமுள்ள இளைஞர்கள், தமக்கான உரைகல்லாக இந்த உள்ளூராட்சித் தேர்தல்களைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பிரதான தெரிவுகளாக உள்ள கட்சிகளை விடவும், தனித்துவமாக, சுயேட்சையாக நின்று தங்கள் அரசியல் பலத்தை எடை போட்டுக் கொள்ளலாம். வட்டார முறையிலான பிரதிநிதித்துவம் என்பதால், ஒவ்வொரு வேட்பாளாரும் அவரவர் ஊரில் செல்வாக்குள்ளவராக இருந்தாலே போதும். சுலபமாக வென்றுவிடலாம். அதன் பின்னர் அவர்கள் தங்கள் ஊருக்காக, தங்கள் பிரதேச மக்களுக்காக என்னென்ன வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென கனவு கண்டார்களோ அதற்காக, அந்த மக்களின் பிரதிநிதியாகப் பாடுபடுங்கள். உள்ளூராட்சி சபைகள் அரசியல் நுழைவுக்கான பயில் களம் தான். இந்த சபைகள், அரசியலில் நுழைந்தால் என்னென்ன சாதகங்கள், பாதகங்கள் என்பனவற்றை ஓரளவுக்கு அனுபவரீதியாகப் போதிக்கும். அதனை அடிப்படையாக வைத்து, மக்களுக்கான புதியதொரு அரசியல் சக்தியாக ஒவ்வொரு இளைஞரும் உருக்கொள்ளும் வாய்ப்பை உள்ளூராட்சித் தேர்தல்கள் வழங்கவுள்ளன. ஏற்கனவே நெடுந்தீவில் பிரதான கட்சிகளைத் தவிர்த்து அந்தப் பகுதி இளைஞர்கள் சுயேட்சைக் குழுவாகக் களமிறங்கும் முனைப்பில் தீவிரமாக உள்ளார்கள். அத்தகைய சிந்தனை, வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் எல்லோரிடமும் பிறந்தால், புதியதோர் விதி செய்யும் அடுத்தகட்ட அரசியல் தலைமைகள் உங்களில் இருந்து உதயமாகக் கூடும். காலம் அழைக்கிறது. காது கொடுப்பார் யாரோ?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# கடற்படை-மக்கள் மன்னாரில் முறுகல்

மன்னார், டிசெ.05

மன்னார் தாழ்வுப்பாட்டு கடலில் மீன் பிடிக்கச் சென்ற சுமார் 25 மீனவர்களை கடற்படையினர் கைது செய்தமையால் அந்தப் பகுதியில் கடற்படையினருக்கும், மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

மன்னார் தாழ்வுப்பாட்டு கிராம மீனவர்கள் நேற்றுக் காலை வழமை போல் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் பாரம்பரியத் தொழிலாக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சுருக்கு வலையினைப் பயன்படுத்தியே மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தொழிலுக்குச் சென்ற தாழ்வுப்பாட்டு மீனவர்களின் 5 படகுகளைச் சேர்ந்த 25 மீனவர்களை கடற்படையினர் கடலில் வைத்து கைது செய்து தாழ்வுபாட்டு கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

மீனவர்கள் கைது செய்யப்பட்டதினை அறிந்து கொண்ட கிராம மக்கள் ஒன்று திரண்டு தாழ்வுப்பாட்டு கடற்கரை முகாமை நோக்கி சென்று எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். குறித்த கிராமத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் சூழ்ந்து கொண்டமையினால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்னார் பொலிஸார் மற்றும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

எனினும் கடற்படையினர் கைது செய்த குறித்த 25 மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமெனவும், அல்லாத பட்சத்தில் கடற்படை முகாமை விட்டு செல்லப் போவதில்லை எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் பொலிஸார் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக கைது செய்யப்பட்ட 25 மீனவர்களையும் கடற்படையினரிடம் இருந்து பொலிஸார் பொறுப்பேற்று மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

குறித்த மீனவர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மன்னார் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் தடை செய்யப்பட்ட மீன்பிடி தொழில்கள் இடம் பெறுகின்றன. எனினும் தாழ்வுப்பாட்டு பிரதேசத்தில் மாத்திரம் கடற்படையினர் கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

# வாடகைக்கு கார்கள் பல இலட்சம் மோசடி

யாழ்ப்பாணம், டிசெ. 05

வாடகைக்கு கார்கள் வழங்குவதாகக் கூறி பல இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை நேற்றுத் தாம் கைது செய்துள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

'யாழ்ப்பணத்தில் கொண்டாட்டங்களுக்கு கார்கள் வாடகைக்கு வழங்குவதாக பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டு பலரிடம் பல இலட்சம் ரூபா பணத்தை சந்தேகநபர் மோசடி செய்துள்ளார் என பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே சந்தேகநபரைக் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# புத்தரை அகற்றுக!

## சிறிதரன் எம்.பி கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.05

கிளிநொச்சி-இரணைமடு நீர்த்தேக்கத்துக்கு அருகில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுமாறு கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், நீர்ப்பாசன அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'இராணுவத்தினர் வணங்குவதற்காகவே குறித்த இடத்தில் புத்தர் சிலை அமைக்கப்பட்டது. ஆனால் ,தற்போது குறித்த இடத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிவிட்டனர். எனவே இங்கு புத்தர் சிலை இருப்பது பிரயோசனமற்ற ஒன்று.

சுமார் 3,200 மில்லியன் ரூபா செலவில் இரணைமடு நீர்த்தேக்கம் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நீர் செல்லும் கதவுகளை விரிவாக்க இந்தப் புத்தர் சிலை தடையாகவுள்ளது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(அ)

# தமிழ்வின் இணையத்தால் செய்தியாளருக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ. 05

தமிழ்வின் இணையத்தளத்தின் செய்தி முகாமையாளர், சுயாதீன ஊடகவியலாளர் ஒருவருக்கு மிரட்டல் விடுத்ததுடன் தகாத வார்த்தைப் பிரயோகத்தையும் மேற்கொண்டார் என சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குப்பிழானைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரான செ.ரவிசாந்த் (வயது -29) என்பவரே இவ்வாறு மிரட்டப்பட்டுள்ளார்.

சுயாதீன ஊடகவியலாளரான அவர், தமிழ்வின் இணையத்தளத்தின் செய்தியாளராகவும் செயற்பட்டு வருகின்றார். யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கடந்த 27ஆம் திகதி மாவீரர் நாள் குறித்த விவரங்களை இணையத்தள அலுவலகத்தின் அனுமதியுடன் சென்று சேகரித்துள்ளார். அந்தச் செய்திகளை இணையத்துக்கு அனுப்ப முயன்றபோது அந்தச் செய்தியை ஏற்கனவே பதிவேற்றம் செய்து விட்டோம் என நிர்வாகத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அந்தச் செய்தி பதிவேற்றம் ஆகவில்லை என்றும் செய்தியை அனுப்புவதா என்றும் இணையத்தின் ஆசிரியரிடம் செய்தியாளர் கேட்டுள்ளார். அவரின் சம்மதத்தின்பேரில் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் அவரின் செய்திக்கு வேறு ஒருவரின் பெயர் போடப்பட்டதாக செய்தியாளர் ஆசிரியரைத் தொடர்புகொண்டு கேட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. இதையடுத்து செய்தியாளரைத் தொடர்பு கொண்ட செய்தி முகாமையாளர், அவரைத் தகாத வார்த்தைகளால் ஏசியதுடன், மிரட்டலும் விடுத்துள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து இணையத்தளத்தின் முகாமையாளரிடம் முறையிட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதையடுத்து இந்த மிரட்டல் குறித்து நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## இன்று நாளும் கோளும்

05.12.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 19 ஆம் நாள்

துதியை பகல் 05.45 மணி வரை | மிருகசீரிடம் பகல் 06.48 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 3.00 - 04.30 | சுபநேரம் 07.45 - 08.45 | எமகண்டம் 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புகழ் | கீர்த்தி | சுபம் | நட்பு | அன்பு | சாந்தி | வெற்றி | வரவு | சுகம் | கோபம் | வீரம் | திறமை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# மாற்றுத் திறன் மாணவர்களுக்கு வடமராட்சியில் தனிப் பிரிவு

## தன் கனவு அதுவே என்கிறார் அகிலதாஸ்

வடமராட்சி, டிசெ.05

மாற்றுத்திறனுடைய மாணவர்கள் கல்வி கற்பதற்காகத் தனியான பிரிவு ஒன்றினை வடமராட்சிக் கல்வி வலயத்தில் உருவாக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வலயகல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச மாற்றுத்திறனுடையோர் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"வடமராட்சி மண்ணில் நான்கு பாடசாலைகளில் விசேட தேவையுடைய பிள்ளைகள் ஆங்காங்கே, பகுதி பகுதியாகக் கல்வி பயின்று வருகின்றார்கள். ஆயினும் இவர்கள் அனைவரையும் ஒன்றாக்கி ஒரு விசேட பிரிவினை உருவாக்கி கல்வி புகட்ட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. இதன் மூலம் அந்த மாணவர்களின் அறிவுத்தன்மையை அதிகரிக்க முடியும் என்பதுடன் அவர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் இலகுவாக இருக்கும்" என அவர் இதன் போது தெரிவித்தார்.

வடமராட்சி கல்விப் பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து, வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், ஐக்கிய தேசிய கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் நாகேந்திரன் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-11)

## தாயால் தற்கொலை

அனுராதபுரம்,டிசெ.05

அனுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் தாய் திட்டியதால் மகன் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

மதவாச்சி, துட்டுவெவ, எட்டவீர கொல்லேவ பிரதேசத்தை சேர்ந்த 14 வயதான சிறுவனே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

தாயாருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது தாயார் மகனைத் திட்டியுள்ளார். தனையடுத்து வீட்டறைக்குள் சென்ற சிறுவன் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்துச் சிறுவனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போதே அவர் உயிரிழந்துள்ளார. அவரின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. புஹூதிவுல கல்லூரியில் கல்வி கற்று வந்த இந்தச் சிறுவனுக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## போயாச் சாராயம் பொலிஸில் சிக்கியது

வடமராட்சி, டிசெ.05

கரவெட்டி சிறிநாரதா வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் போயா தினமான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணியளவில், 375 மி.லீற்றர் அளவுடைய 19 போத்தல்களில் சாராயத்தை வைத்திருந்த 60 வயதான வயோதிபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-11)

* * *

வடமராட்சி, டிசெ.05

03.12.2017 போயா தினத்தில் வல்வெட்டித்துறை, கோவிற்சந்தைப் பகுதியில் போயா தினமான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை,இடுப்புக்குள் இருந்த கசிப்பு போத்தலுடன் வந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-11)






## பயங்கர விபத்துக்கு நேற்றுடன் வயது 43

கொழும்பு,டிசெ.05

இலங்கையில் நடந்த பயங்கரமான விமான விபத்து ஏற்பட்டு நேற்று திங்கட்கிழமையுடன் 43 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளது.

கடந்த 1974ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி நெதர்லாந்து நாட்டுக்குச் சொந்தமான மார்டின் எயார் டி.சி 8 என்ற விமானம் இந்தோனேசியாவின் சுரபாயா விமான நிலையத்தில் இருந்து புனித மக்காவுக்கு யாத்திரீகர்களை ஏற்றிச் சென்றது.

இந்த விமானத்தில் 182 பயணிகளும் விமானிகள் உட்பட 9 சிப்பந்திகளும் பயணம் செய்தனர். அன்றைய தினம் இரவு 10.10 அளவில் விமானம் அக்ரபத்தனை, நோர்வூட் காஸல்ரீ நீர்தேக்கத்துக்கு மேல் பறந்துகொண்டிருந்த போது நோர்ட்டன் பிரிஜ் பொலிஸ் பிரிவுக்குரிய டேபர்டன் தோட்டத்திற்கு மேலுள்ள ஏழு கன்னிமார் மலையில் மோதியதில் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.விமானம் விபத்துக்குள்ளான போது அதில் 191 பேர் பயணித்தனர். இவர்களில் 190 பேர் மலையடிவாரத்தில் அடக்கம் செய்ப்பட்டனர். அதில் பயணித்த பணிப் பெண் ஒருவருடைய சடலத்தை மாத்திரம் அவரது காதலன் இந்தோனேசியாவுக்கு எடுத்துச்சென்றிருந்தார்.

விமானத்தின் பகுதிகள் துண்டுகளாக உடைந்திருந்தன. விமானத்தில் இருந்து விழுந்த பெருந்தொகைப் பணத்தைப் பிரதேச மக்கள் பொறுக்கியெடுத்துக் கொண்டனர்.விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே விபத்துக்குக் காரணமென விசாரணை நடத்திய குழுவினரின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.(அ)

## சிறுவர் துஷ்பிரயோகத்தை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம்

கொழும்பு,டிசெ.05

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான வழக்குகளை விசாரணை செய்யச் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என நீதியமைச்சர் தலதா அத்துகோரல நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்.

"சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து சுமார் 19 ஆயிரம் வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பார்வையில் உள்ளன. அவை குறித்தே முதலில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எதிர்வரும் ஜனவரியில் இடம்பெறவுள்ள மூன்று சிறப்பு நீதிமன்ற அமர்வுளின் போது மிகமுக்கிய வழக்குகள் விசாரிக்கப்படவுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" எனவும் அவர் குறிப்பிட்டார்.(அ)

## இவையைப் பாத்து அவையும் செய்யலாம்

நேற்றைக்குக் கொஞ்சம் மழை விட்டுக் கிடந்தது. காலைமை வழமையாப் போறது போலை பேப்பர் கடை, சந்தைச் சாமான் வேண்டுறது, பால்கடை வேலை எண்டு எல்லாத்தையும் முடிச்சுப்போட்டு ஆறுதலா வந்து சாக்குக் கட்டிலிலை கிடந்தன்.

முதலி அவசரமா வந்தான். "அண்ணை! இனி உனக்கு ஏதேன் வேலை கிடக்கோ", எண்டு கேட்டான். "இல்லை" எண்டன். சட்ட நாதர் கோவிலடியிலை மாற்றுத் திறனாளியள் தின விழாவாம். சின்னத்துரையின்ரை பெடி பெட்டையள் போகவாம். துணையா வரச் சொல்லிக் கேக்கினம். அதுகள் சாதாரண ஆக்கள் எண்டால் மாட்டான் எண்டு சொல்லிப் போடுவன். உனக்குத் தெரியுந்தானே? தேப்பன் இல்லாத துகள். செல்லடிபட்டு பெடி, பெட்டை இரண்டு பேரும் வலு இல்லாதவை. இரண்டு பேரையும் பிடிச்சு நிமித்த ஆக்கள் வேணும். அதுதான் என்னைக் கேட்டவை. எனக்குத் தோட்ட வேலை துவங்கிவிட்டு தெல்லே! இனி அரக்கேலாது. நீதான் ஒருக்காப் போட்டு வரவேணும். அதுகள் ஓட்டோ பிடிப்பினம். நீ சும்மா ஒரு ஒத்தாசைக்கிருந்து போட்டு வா. அங்கை மத்தியானம் சாப்பாடாம். அதையும் முடிச்சுப் போட்டு இருந்து ஆறுதலாக் கூட்டிக் கொண்டு வாவன்" எண்டு முதலி கெஞ்சினான். ஒரு உதவி தானே! "ஓம்" எண்டு சொல்லிப் போட்டு அவையோடை போன்னான்.

சட்டநாதர் கோவிலடி இளங்கலைஞர் மன்றத்திலை தான் விழா நடந்தது. அதென்ன விழா. நான் யாழ்ப்பாணத்திலை அப்பிடி ஒழுக்கமா விழா நடத்திறதைப் பாக்கேல்லை. நேரத்துக்குத் துவங்கி நேரத்துக்கு முடிஞ்சிது.

ஆனால் அங்கை போனாப்பிறகுதான் தெரிஞ்சிது. கள்ளியங்காட்டிலை வலு இல்லாத ஆக்களுக்கெண்டு "கருவி" எண்ட பேரோடை ஒரு அமைப்பு இருக்கெண்டு. அங்கக் குறைபாட்டோடை இருக்கிற ஆரும் அதிலை மெம்பராகலாமாம். அதை நடத்திறவையும் வலு இல்லாத ஆக்கள் தான். அவையையும் அங்கை கண்டனான். தலைவரும், செயலாளரும் பார்வை இல்லாத ஆக்கள். அதிலை தான் சின்னத்துரையின்ரை பெடி பெட்டையள் மெம்பரா இருக்கினம். அவையளைப் போலை ஆக்கள் நாலாபக்கமும் இருந்து வந்தவை. மண்டபம் நிறம்பிவிட்டுது. இருக்க இடமில்லாமலும் நிக்கக் கூடியவை நிண்டவை.

சரியா பத்து மணிக்கு விழா தொடங்கிச் சிது. கட, கட வெண்டு சொல்லி வைச்ச மாதிரி எல்லாரும் பேசினவை. சனத்திலை அக்கறையும், ஆர்வமும் இருக்கிறவை தான், விருந்தினரா வந்தவை. அதிலை. அவை எல்லாவிதமான விசியங்களையும் செய்தினம். கதை, கவிதைப் போட்டி வைச்சு வெண்ட ஆக்களுக்கு பரிசு குடுத்தவை. தங்கடை உறுப்பினரின்ரை பிள்ளையளுக்கு ஆளுக்கு ஒரு பள்ளிக் குடத்துக்குக் கொண்டு போற பாக்கும் , ஒரு சின்ன குடை, கொப்பியும் வேறை சாமாங்களும் குடுத்தவை. அதோடை அங்கை இப்ப அவை நடத்தின தையல் வகுப்பிலை வேலை பழகினவைக்கு நற்சான்றும் குடுத்தவை. அதிலை 9 வயதிருக்கும் ஒரு சின்னப் பெடி திருக்குறளைப் பற்றிப் பேசினவன். மற்றது சின்னப்பிள்ளையளின்ரை பாட்டு நடனம். இரண்டும் நல்லாத்தானிருந்திது.

கலாச்சார விழா எண்டு எங்களை அடிக்கடி கூப்பிடுறவை. போறனாங்கள். "காலை 10 மணிக்கு விழா நடைபெறும்" எண்டு போட்டிருப்பினம். அடிச்சுப் பிடிச்சுப் போனால் சிலவேளை 11 உம் ஆகும். அவையின்ரை விழாவுக்கு வரவேண்டிய முக்கியமான ஆக்கள் அரெண்டால் அரசாங்க உத்தியோகம் பாக்கிறவை இல்லாட்டி பாட்டி ஆக்கள் தானே? அவை நேரத்துக்கு வாரயினம். அது அவைக்குந் தெரியும்." தாங்கள் போகாமல் விழா நடக்காதெண்டு". வந்தும் சும்மா இராயினம்.

அதோடை முக்கியமா கருவி தங்கடை விழாவிலை செய்த ஒரு நல்ல வேலை முக்கியமான ஆக்களைக் கௌரவப்படுத்தினதுதான். எனக்குப் பிடிச்சது அது தான். அரச மட்டத்திலை இல்லாட்டிலும் எங்கடை வட மாகான கலாசாரத் திணைக்களமாவது இப்பிடியான விசியத்தைச் செய்யலாம். ஆனால் செய்யிறேல்லை. செய்யவும் மாட்டினம். இப்பிடியான விசியத்தை கடைசி அரசாங்க அதிபராவது ஊக்குவிக்கலாம். ஏனோ தெரியாது அவரும் செய்யிறேல்லை.

இண்டைக்கு இணையத்திலை இருக்கிற தமிழ் கலைக் களஞ்சியம் எண்டு சொல்லுற தமிழ் விக்கிப்பீடியாவை உருவாக்கின மயூரநாதன் எண்டவருக்கும், வட மாகணத்திலை உள்ள தனிப்பட்ட விழாக்களிலையும் மண்டப விழாக்களிலையும் மேலதிகமாக் கிடக்கிற சாப்பாடுகளைச் சேர்த்து கொண்டு போய் சாப்பாட்டுக்காக ஏங்கிறவைக்குக் குடுக்கிற விண்மீன் எண்ட அமைப்பை வைச்சு நடத்திற புவிகரன் எண்ட பெடிக்கும் கௌரவம் நடந்தது. மயூரநாதனுக்கு பேரசிரியர் தயா சோமசுந்தரமும், புவிகரனுக்கு தினக்குரல் பாரதியும் பொன்னாடை போத்துக் கௌரவப்படுத்தினவை. கருவி செய்த இந்த நல்ல காரியத்தைப் பாத்தாவது மற்றவையும் செய்யலாமே?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் காணிகளை விடுவிக்குக!

## ஜனாதிபதிக்கு கடிதம்



திருகோணமலை,டிசெ.05

திருகோணமலை,ரொட்டவெவ கிராம விவசாயிகளின் விவசாய நிலங்களான சின்னப் புளியங்குளம், பெரிய புளியங்குளம் காணிகளைத் தேர்தலுக்கு முன்னர் விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மொறவெவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எஸ்.எம். பைசர் எழுதியுள்ள கடிதத்திலேயே குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதில் “கடந்த யுத்த காலத்துக்கு முன்னர் ரொட்டவெவ விவசாயிகள் புளியங்குளம் பகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். கடந்த அரசாங்கத்தினால் கமநெகும, மகநெகும திட்டங்களின் ஊடாக விவசாயிகளின் விவசாயத்தினை மேம்படுத்தும் நோக்கில் இரண்டு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. தற்போது வன இலாகா அதிகாரிகள் அந்த விவசாயக் காணிகளுக்குள் செல்ல வேண்டாம் எனத் தெரிவித்துள்ளனர். அத்துடன் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அரசியல்வாதிகள் பல தடவைகள் பேசியும் இன்னும் மக்களுக்கு சிறந்த பெறுபேற்றினை தரவில்லை. எனவே, அந்த விவசாயக் காணியில் விவசாயம் செய்ய அனுமதியைப் பெற்று தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் தேர்தல் நடைபெற முன்னர் ஜனாதிபதியாகிய தங்களுடைய ஆதரவினை விவசாய மக்களுடைய நலன் கருதி வழங்க வேண்டும்” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



05.12.1995

இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து தாம் முழுமையாகக் கைப்பற்றியதாக அறிவித்தது.

## புறக்கோட்டையில் தீ

கொழும்பு,டிசெ.05

புறக்கோட்டையில் வர்த்தக நிலையம் ஒன்று திடீரென தீப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். புறக்கோட்டை இரண்டாம் குறுக்கு வீதியின் ஆபரணக் கடை ஒன்றிலேயே இவ்வாறு திடீரெனத் தீப்பற்றியுள்ளது. பொலிஸார் மற்றும் கொழும்பு தீயணைப்புப் பிரிவு இணைந்து முழுமையாகத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மின்கசிவு காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் இன்னமும் வெளியாகவில்லை. (அ)

## பிரான்ஸ் கப்பல் இலங்கையில்

கொழும்பு,டிசெ.05

பிரான்ஸின் கடற்படைக் கப்பலான ‘ஒவெர்ஜென்’ இலங்கைக்கு நேற்று திங்கட்கிழமை வந்தது. இந்தக் கப்பலை இலங்கையின் கடற்படையினர் வரவேற்றனர். இதன் போது பிரான்ஸின் தூதுவர் உட்பட்ட அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர். நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்தக் கப்பலில் பயணித்துள்ள 142 கடற்படை வீரர்கள் இலங்கையில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். (அ)

## வெற்றுக் கதிரைகளுடன் கலாசாரப் பெருவிழா



வவுனியா,டிசெ.05

வவுனியா மாவட்டக் கலாசார நிகழ்வு நகர சபை கலாசார மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

எனினும் குறித்த கலாசார நிகழ்வில் பெருமளவிலானவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் மிகச் சொற்பமானவர்களுடனேயே இந்தக் கலாசார விழா நடந்து முடிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

வடமாகாணப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் வவுனியா மாவட்டச் செயலகமும், பிரதேச செயலகமும் இணைந்து குறித்த கலாசார நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன. எனினும் முறையான ஒழுங்குபடுத்தல் மற்றும் சரியான முறையில் அழைப்புக்கள் வழங்கப்படாமையினால் மாவட்டத்தில் உள்ள கலைஞர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்களுடனும், விருந்தினர்களுடனுமே நிகழ்வு இடம் பெற்றது. (அ)

## கஞ்சாவை கடத்தியோர் கைது



கொழும்பு,டிசெ.05

சிவனொளிபாதமலைக்குக் கஞ்சா கொண்டு சென்ற நால்வரைக் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்தனர்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் நோட்டன், தியகல சந்தியின் பொலிஸ் சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 750 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. புசல்லாவையிலிருந்து சிவனொளிபாதமலைக்கு வான் ஒன்றில் சென்ற 22 வயதுடைய இளைஞர்களே கைது செய்யப்பட்டனர். மேலும், கைது செய்யப்பட்ட நால்வரையும் நேற்றுத் திங்கட்கிழமை ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தில் அஜர்ப்படுத்தவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## பொன்னாலைப் பெண் கொலையா? தற்கொலையா?


கொழும்பு, டிசெ. 05

யாழ்ப்பாணம், வேலணையில் கிணறு ஒன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட பெண்ணின் சடலம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. 32 வயதான யோகேந்திரன் பத்மாவதி என்ற பெண்ணின் சடலம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர் தங்கியிருந்த வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த பெண் வீட்டில் இல்லாததனை அறிந்து கொண்ட உறவினர்கள் அவரைப் பல இடங்களில் தேடி இறுதியாகப் பெண்ணின் சடலம் கிணற்றில் மிதந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். குறித்த பெண்ணின் கைகளில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

இதனையடுத்து குறித்த பெண்ணின் சொந்த ஊரான பொன்னாலையில் இடம்பெற்ற இறுதிக் கிரியையின் பின்னர், அவரின் சடலம் புதைக்கப்பட்டுள்ளது. (அ)

## அவதானம்! இன்றும் நாளையும்



கொழும்பு,டிசெ.05

அந்தமான் தீவுக்கு அருகில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் தீவிரமடைந்து வரும் நிலையில், இந்தியாவை நோக்கி நகர்ந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து கிழக்குப் பகுதியின் 1350 கிலோ மீற்றர் தூரத்தில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் நிலை கொண்டுள்ளது. இந்தத் தாழமுக்கம் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மேலும் வலுவடைந்து, எதிர்வரும் மூன்று நாட்களில் மேல் திசையை நோக்கிப் பயணித்து வங்காள விரிகுடா கடல் பிரதேசம் ஊடாக இந்தியாவை நெருங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் இலங்கைக்கு இன்று செவ்வாய்க்கிழமை பாதிப்பேற்படும் எனவும், இது தொடர்பில் தொடர்ந்து அவதானத்துடன் செயற்படுமாறும் பொது மக்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. தாழமுக்கம் தொடர்பில் ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அறிவிக்கப்படும் எனவும், கடல் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்பதனால் மீனவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இன்றும், நாளையும் நாடு முழுவதும் அடை மழை பெய்யும் எனவும் மண் சரிவுகள் தொடர்பில் அவதானத்தைச் செலுத்துமாறும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஊடகங்களில் வெளியாகும் அனர்த்த முகாமைத்துவத் தகவல் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.



## நீதிமன்றுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.05

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்படவுள்ள திறந்த நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். 242 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நாட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரகுமாரின் கட்சியும் தனித்துக் களமிறங்குகிறது


கிளிநொச்சி, டிசெ.05

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிளிநொச்சியில் 3 பிரதேச சபைகளுக்கும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் கட்சி தனித்து போட்டியிடும். இதற்கான அனைத்து பணிகளும் நிறைவுற்றுள்ளன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் கட்சியின் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கடந்த சனிக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“எங்களுடைய அமைப்பு வருகின்ற உளளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து களமிறங்கவுள்ளது. கிளிநொச்சியில் கரைச்சி, பளை, பூநகரி ஆகிய பிரதேச சபைகளில் நாங்கள் சுயேட்சையாக போட்டியிடுகின்றோம். அதற்கான அனைத்து பணிகளையும் பூர்த்தி செய்துள்ளோம். மக்களின் விருப்பத்திற்கு அமைவாக அவர்களின் முன்மொழிவுகளுக்கு ஊடாக ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் மக்கள் மத்தியில் நன்மதிப்பு மிக்க நல்ல வேட்பாளர்களை மக்கள் எமது அமைப்புக்கு வழங்கியுள்ளனர்.

நாங்கள் பிரதேச சபையின் அதிகாரத்திற்கு வருகின்ற போது பிரதேச சபைகளை வினைத்திறன் உள்ள ஒரு சபையாக மாற்றுவோம், செயற்பாடே எங்களுடை பலம் அதுவே மக்களுக்கும் தேவை - என்றும் இதன்போது அவர் தெரிவித்தார். (ச)




## தொடர்ச்சிகள்

### கடலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழைப் பொழிவும் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள், பொதுமக்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச)

### இரு இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யையும் சேதப்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா கஜவதனன்(வயது20) என்ற இளைஞன் படுகாயமடைந்தார்.

இதேகுழு, மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் “கரம் போட்”விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது வாள்வெட்டு நடத்தியது. அங்கு நின்றவர்கள் தப்பிய நிலையில் இதே இடத்தைச் சேர்ந்த அல்பிரட் டிலக்சன் (வயது -17) என்ற இளைஞர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச - 4)

### “பூ” வில் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்க முயற்சிகள் நடந்தன. தமிழ் மக்கள் பேரவையிடம் - குறிப்பாக வடக்கு முதலமைச்சரிடம் இரு கட்சிகளும் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. எனினும் இணைத்தலைவர் ஒருவரின் ஒத்துழைப்புடன் இந்தப் புதிய கூட்டணி உருவாக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் சின்னம் தொடர்பில் இரு கட்சிகள் இடையே இணக்கம் எட்டாததால் புதிய கூட்டணிக்கு வாய்ப்பு இல்லாமல் போனது. இரு கட்சிகளம் தனித்துத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகின. எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் அல்லாது ஈ.பி. ஆர்.எல்.எவ்வின் “பூ” சின்னத்தில் போட்டியிடத் தயார் என சாதக சமிக்ஞையை வெளியிட்டிருந்தது.

தனித்தனியாகத் தேர்தலை எதிர்கொண்டால் தோல்விக்கான வாய்ப்பே அதிகம் ஏற்படும் என புத்திஜீவிகள் குழு இருவரையும் எச்சரித்ததுடன், இரு தரப்பையும் இணக்கத்துக்கு கொண்டுவர கடும் முயற்சி மேற்கொண்டு வந்தது. இதையடுத்தே மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன. அனேகமாக ஈ.பி.ஆர்.எல். எவ்வின் “பூ” சின்னத்தில் அல்லது சிறு கட்சி ஒன்றின் பொதுச் சின்னத்தில் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இரு கட்சிகளின் கூட்டணியும் மீண்டும் சாத்தியமாகாது போனால் சிறு அமைப்புகள் ஒன்றிணைந்து சுயேட்சையாகப் போட்டியிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. (ச)

### தூங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த இரண்டு வருடங்களுக்குள் விசாரித்து தீர்ப்பளிக்கவுள்ளதாக சட்டமா அதிபரிடம் தான் உறுதியளித்துள்ளதாக நீதிபதி இளஞ்செழியன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

யாழ் மேல்நீதிமன்றப் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டடத்திற்காக நீதியமைச்சினால் 242 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“யாழ்- மேல்நீதிமன்றில் தீர்ப்பளிக்கப்படாத 107 வழக்குகள் காணப்படுகின்றன. இவற்றில் 50 வழக்குகள் மிகவும் முக்கியமான வழக்குகள் என்பதால் அதற்கான முக்கியத்துவம் சட்டமா அதிபரிடமிருந்து கிடைத்துள்ளது. எனவே அந்த 50 வழக்குகளின் விசாரணைகளையும் துரிதப்படுத்தி, அடுத்த இரு வருடங்களுக்குள் அவற்றுக்கான தீர்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்” எனவும் நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார். (அ-4)

### உதயன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதயன் நாளிதழில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் சகல ஊடகங்களுக்கும் நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை அப்படியே வருமாறு:

“கூட்டு அறிவிக்கப்பட்டு 21 நாள்களிலேயே சுரேஷ் - க.குமார் பிரிவு” என்ற தலைப்பிட்டு 03.12.2017 திகதிய உதயன் நாளிதழில் முன்பக்க பிரதான செய்தியில் உண்மைக்கு மாறான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

“ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களும், வடக்கு மாகாண சபையின் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், மன்னார் மாவட்டத்தில் மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வி.எஸ்.சிவகரன் ஆகியோர் கிளிநொச்சியில் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். விரைவில் இந்தக் கூட்டு இடையேயான ஒப்பந்தம் கைச்சாத்தாகக் கூடும் என்று தெரிய வருகின்றது.” என்று அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உண்மைக்கு மாறான இச்செய்தி வெளியிடப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன். எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விசமத்தனத்திற்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் நான் பங்கேற்கவும் இல்லை. அன்றைய தினம் கிளிநொச்சிக்கு செல்லவும் இல்லை. அவ்வாறு இருக்கையில் உண்மைக்கு மாறாக செய்தி வெளியிட்டுள்ளதன் மூலம் எனக்கு எதிரான உதயன் நாளிதழின் விசமத்தனம் தொடர்ந்து வருகின்றது.

இவ்வாறே கடந்த 2013 மாகாண சபைத் தேர்தல் காலத்தில் நான் இலங்கை அரசுடன் இணைந்து விட்டதாக உதயன் நாளிதழ் வெளியிட்ட சிறப்பு பதிப்பில் முக்கிய செய்தியாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. உண்மைக்கு புறம்பாக அடிப்படை ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டு எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதன் மூலம் அரசியல் அரங்கில் இருந்து என்னை வெளியேற்றிவிடலாம் என்று எண்ணியே இவ்வாறான விசமத்தனங்கள் தொடர்ந்தும் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இந்த சலசலப்பிற்கெல்லாம் அஞ்சி அரசியல் களத்தை விட்டு ஓடி ஒளிந்து கொள்வேன் என்று இதன் பின்னால் இருப்பவர்கள் கருதுவார்களேயானால் அவர்களது கனவு கனவாகவே தொடரும் என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்கின்றேன். சாதாரண அரசியல்வாதியாக நான் தமிழ்த் தேசிய அரசியலுக்கு வரவில்லை. நீதி நியாயத்திற்காக துணிச்சலுடன் போராடிய போராளியாக இருந்தே அரசியல் பிரவேசம் செய்துள்ளேன். அரசியல் போராளியாக எனது மக்கள் பணி தொடரும் என்பதை அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

### உள்ளூராட்சித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சித் தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்று வழங்கவேண்டும்” என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் றோஹன ஹெட்டியாராச்சி சார்பாக முன்னிலையாக சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

மனுவின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்க உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், மனு மீதான விசாரணையை பெப்ரவரி 27ஆம் திகதி வரை ஒத்தி வைத்து.

இதேவேளை, அம்பகமுவ பிரதேச சபைக்கான எல்லைநிர்ணயம் தவறு எனக் குறிப்பிட்டு உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சார்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச)

### மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறப்படுகின்றது.

மாவீரர் தினத்தின் போது இந்தத் துயிலுமில்லத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் புனரைமைக்க எடுக்கப்பட்ட முயற்சியை, பிரதமர் ரணில் அவசரமாகத் தடுத்து நிறுத்தியிருந்தார். இந்த நிலையிலேயே நேற்றுமாலை, குறித்த மாவீரர் துயிலுமில்லத்தில் ,” தாவரவியல் பூங்கா’ எனப் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகை நிறுவப்பட்டுள்ளது. இப்படித் திடீரென மாவீரர் துயிலுமில்லத்தின் பெயரை தன்னிச்சையாகக் கரைச்சிப் பிரதேசசபை மாற்றியதால் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் விசனம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதனைத் தொடர்பு கொண்டபோது,

“இந்தப் பெயர்ப் பலகை கரைச்சி பிரதேச சபையினாலேயே வைக்கப்பட்டுள்ளது. கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் குறித்த பகுதி தாவரவியல் பூங்கா என்றுதான் வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இது தாவரவியல் பூங்கா என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. தாவரவியல் பூங்கா என்ற பெயரிலேயே இங்கு தற்போது அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகின்றமையால் அதனைத் தெளிவூட்டும் வகையிலேயே கரைச்சி பிரதேச சபையினால் இந்தப் பெயர்ப் பலகை வைக்கப்பட்டது” என்று அவர் தெரிவித்துள்ளார்.(ஆ)

### யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல பஸ்களையும் யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் செம்மணி யாழ்.வளைவுப் பகுதியில் வழிமறித்த பொலிஸார், பயணிகளின் பயணப் பொதிகள் உள்பட பஸ்ஸின் சகல பாகங்களையும் துருவித் துருவி சோதனையில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்தே பயணித்தனர்.“யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்றில் பெருமளவு கஞ்சாப் போதைப்பொருள் கடத்தப்படுவதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அதனை முறியடிக்கவே பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர். அதனால் தான் ஒவ்வொரு பஸ்ஸும் தவறவிடாமல் சோதனைக்குட்படுத்தப் பட்டது” என்று பொலிஸார் கூறினர்.(அ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயை கலாய்த்த டி.டி



சென்னை,டிசெ.05

வேலைக்காரன் இசை வெளியீட்டு விழாவை டி.டி என்கிற திவ்யதர்ஷினி தொகுத்து வழங்கிய போது விஜய் தொலைக்காட்சியை அனைவர் முன் னிலையிலும் கேலியாகப் பேசினார்.

இசை வெளியீட்டு விழா முடிவில் டி.டி புகைப் படக் கலைஞர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் வழங் கிக் கொண்டிருந்தார். முதலில் அருகில் இருப்பவர் கள் புகைப்படம் எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் தூரத்தில் கமரா வைத்துள்ளவர்கள் எடுத்து கொள் ளட்டும் எனக் கூறினார்.

எல்லோரும் புகைப்படம் எடுத்து முடித்த பிறகு, “இவங்க விஜய் டி.வி மாதிரி எடுத்துக்கொண்டே இருப்பார்கள். நாம கிளம்பலாம். காலைல 4 மணிக்கு தான் விடுவாங்க நாம கவனமாக இப் போவே கிளம்பலாம்” எனக் கூறிக் கலாய்த்தார் டி.டி. (எ)

# 2.0 இடத்தில் சாய்பல்லவியின் கரு



சென்னை,டிசெ.05

லைகா புரொடக்ஷன்ஸ் சார்பில் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி இருக்கும் ‘2.0’ படத்தின் வெளியீட்டுத் திகதி தள்ளிப்போயிருக்கும் நிலை யில், அந்த இடத்தை சாய்பல்லவி நடிப்பில் உரு வாகியிருக்கும் ‘கரு’ படம் நிரப்பும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

லைகா புரொடக்ஷன்ஸ் சார்பில் ஷங்கர் இயக் கத்தில் உருவாகி வரும் படம் ‘2.0’. ரஜினிகாந்த், அக்‌ஷய் குமார், எமி ஜாக்சன் முன்னணி கதாபாத் திரங்களில் நடித்திருக்கும் இந்தப் படத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் அதிநவீன கிராபிக்ஸ் பணிகள் இன்னமும் முடிவடை யாததால் வருகிற ஜனவரி 26 ஆம் திகதி வெளியா கும் என்று அறிவிக்கபட்டிருந்த இந்தப் படத்தின் வெளியீடு ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளிவைக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில், லைகா புரொடக் ஷன்ஸ் சார்பில் சாய் பல்லவியின் முதல் தமிழ் பட மாக உருவாகி வரும் ‘கரு’ படத்தை ஜனவரி 26இல் வெளியிடப் படக்குழு முடிவு செய்துள் ளது. (எ)

# அருகில் வடகொரியா ஆபத்தில் அமெரிக்கா



அமெரிக்கா,டிசெ.05

போருக்கான சாத்தியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது, ஆனால், ஆயுதப்போர் மட்டுமே தீர்வைத் தராது என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஹிச்ஆர் மெக் மாஸ்டர் நேற்று திங்கட்கிழமை தெரி வித்தார்.

உலக நாடுகளின் கண்டனத்துக்கு மத்தி யிலும்,வட கொரியா தொடர்ந்து தனது ஏவுகணை மற்றும் அணு ஆயுதத் திட் டத்தை அபிவிருத்தி செய்து வருவதால் பதற்றங்கள் அதிகரித்துள்ளன. தனது ஹவாசாங்-15 என்ற சமீபத்திய ஏவுகணை 4,475 கிலோ மீற்றர் உயரத்தில், 960 கிலோ மீற்றருக்கு 53 நிமிடங்கள் பறந்த தாகவும்,முழு அமெரிக்காக் கண்டத்தை யும் தாக்கும் வல்லமை இதற்கு இருப்ப தாவும் வட கொரியா அறிவித்தது. இதனால்,அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் கூடுதல் பாதுகாப்பை நிலை நிறுத்தப் பாதுகாப்புத் துறை தயாராகிறது. வட கொரியா முன்பு சோதித்த ஏவுகணைகளை விடச் சமீ பத்திய ஏவுகணை அதிக உயரம் பறந் தது.

இந்த நிலையில்,கலிபோர்னியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் ஹிச்ஆர் மெக் மாஸ்டர்,

“வடகொரியா நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆயுதப் போரை தவிர்த்து பிரச்சனையைத் தீர்க்கப் பல வழிகள் உள்ளன. சீனாவின் நலனைக் கருத்தில் கொண்டு பிரச்சனையைத் தீர்க்க சீனாவிடம் கேட்டுள்ளோம். எரிபொருள் இல்லாமல் ஏவுகணை ஏவ முடியாது” எனத் தெரிவித்தார். (எ)



# பாரவூர்தி விபத்தில் 21 பேர் சாவு!

சிம்பாவே,டிசெ.05

சிம்பாவேயில் இடம்பெற்ற பாரவூர்தி விபத்தில் சிக்கி 21 பேர் நேற்று திங்கட்கிழமை உயிரிழந்தனர்.

சிம்பாவேயின் மேற்குப் பகுதியிலுள்ள ஷோலுட்ஷோ மாவட்டத்தில் பாரவூர்தியொன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்த மையினாலேயே குறித்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்து இடம்பெற்ற வேளை பாரவூர்தியில், 69இற்கு மேற்பட்ட பயணிகள் இருந்தாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.இதன்போது காயமடைந்த 21 பேர் மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் சிம்பாவே பொலிஸார் தெரி வித்தனர். (எ)

# இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேம் அரபு நாடுகள் எதிர்ப்பு

அம்மான்,டிசெ.05

இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்க அமெரிக்கா எடுத்துள்ள முடி வுக்குப் பல அரபு நாடுகள் அதிருப்தி மற்றும் எதிர்ப் பைத் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் கட்டுப்பாட் டில் தற்போது உள்ள ஜெரு சலேம் நகரமானது யூதர் கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் புனித தலமாக உள்ளது. ‘ஆறு நாள் போர்’ என்று வரலாற்றில் குறிப்பிடும் 1967 மத்திய கிழக்குப் போரின் போது ஜெருசலேம் நகரை இஸ் ரேல் கைப்பற்றியது. இதனை யடுத்து, 1980ஆம் ஆண் டில் அந்த நகரைத் தன்னு டன் இணைத்து இஸ்ரேல் நிர்வகித்து வருகிறது. கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின்போது, ஜெருசலேமில் அமெரிக்க தூதரகம் அமைக்கப்படும் என ட்ரம்ப் பேசியிருந்தார். இந்த நிலையில், இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவித்தால் அதை அங்கீக ரிக்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க கூறியிருந்தது.

அமெரிக்காவின் இந்த முடிவுக்கு மத்திய கிழக்கு நாடுகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. (எ)

# காங்கிரஸ் தலைவர் பதவிக்கு மனுத் தாக்கல்



சென்னை,டிசெ.05

காங்கிரஸ் தலைவர் பத விக்கு ராகுல் காந்தி நேற்று திங்கட்கிழமை வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் தலைவர் பத விக்கான தேர்தலை டிசெம் பர் 16ஆம் திகதி நடத்த அந் தக் கட்சி திட்டமிட்டுள்ளது. அதற்கான வேட்புமனுத் தாக் கல் டிசம்பர் 1ஆம் திகதி தொடங்கியது. நேற்று முன் தினம் வரை வரை யாரும் வேட்பு மனுத் தாக்கல்செய்ய வில்லை. நேற்றுக் காலை யில் டெல்லியிலுள்ள காங்கி ரஸ் கட்சித் தலைமை அலு வலகத்தில் ராகுல் காந்தி, கட்சித் தலைவர் பதவிக்கு வேட்புமனுத் தாக்கல் செய் தார். அவரது வேட்பு மனுவை முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கும், முன் னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.அந்தோனியும் முன் மொழிந்தனர். இன்று செவ் வாய்க்கிழமை வேட்புமனுப் பரிசீலனை நிறைவடைந்து மூன்று மணிக்கு வேட்பா ளர் பட்டியல் வெளியிடப் படும். ராகுல் காந்தியைத் தவிர வேறு யாரும் தலை வர் பதவிக்கு மனுத் தாக்கல் செய்யாத நிலையில், ராகுல் காந்தி கட்சித் தலைவராக அறிவிக்கப்படுவார். (எ)

# விஷாலை வரவேற்கும் குஷ்பு



சென்னை,டிசெ.05

விஷாலின் அரசியல் பிரவேசத்தை வரவேற்பதாகக் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளரும் நடிகையுமான குஷ்பு நேற்று திங்கட்கிழமை தெரிவித் தார்.

“விஷால் எனது நெருங்கிய நண் பர். அவர் அரசியலில் இறங்கியிருப் பதற்கு எனது வாழ்த்துக்கள். அரசி யல் வேறு நட்பு வேறு. விஷால் மட்டு மல்ல. யார் வேண்டுமானாலும் அர சியலுக்கு வரலாம். மாற்றம் வரவேண் டும், மாற்றம் வர வேண்டும் என்று வெளியில் இருந்து பேசுபவர்கள் மாற் றத்தைக் கொண்டுவர அரசியலில் இறங் கிப் போராட வேண்டும். விஷால் தைரியமாக அரசியலில் இறங்கிய தைப் பாராட்டுகிறேன். அவர் ஒரு சினிமாக் கலைஞர் மட்டுமல்ல. இந்த நாட்டின் குடிமகன் தானே. என்.டி.ஆர், எம்.ஜி.ஆர், கலைஞர், ஜெயலலிதா என்று புகழ்பெற்ற தலைவர்கள் எல்லாம் சினிமாவில் இருந்து வந்திருக்கிறார்கள். எந்த துறையில் இருந்தும் அரசியல் சேவைக்கு வரலாம். ஆர்.கே.நகர் தேர்தல் முடிவு எப்படி இருக்கும்? விஷாலுக்கு வாய்ப்பு உண்டா என பதைப் பற்றி இப்போது பேசிக்க வேண்டியதில்லை. அதை மக்கள் முடிவு செய்வார்கள்.அரசியலில் இறங் குவது வேறு. செல்வாக்கு பெறுவது வேறு. அரசியலில் இறங்கி செய்யும் சேவைகளைப் பொறுத்து மக்கள் வாக் களித்துச் செல்வாக்கைக் காட்டுப்பார் கள்”என மேலும் கூறினார் குஷ்பு.(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மத்தியூஸ், சண்டிமால் சதம்
# போராடுகிறது இலங்கை

புதுடில்லி, டிசெ. 05

மத்தியூஸ், சண்டிமாலின் சதங்களால் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் போராட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது இலங்கை அணி.

இரு அணிகளுக்கும் இடையே சனிக்கிழமை டில்லியில் தொடங்கிய இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பெடுத்தாடியது. 127.5 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 536 ஓட்டங்களை எடுத்து முதல் இனிங்ஸை இடைநிறுத்தியது. தனது முதல்இனிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, நேற்று முன்தினம் ஆட்டம் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களை எடுத்தது. மத்தியூஸ் 57, சண்டிமால் 25 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்றைய ஆட்டத்தில் இருவரும் இந்திய அணியின் பந்துகளை அபாரமாக எதிர்கொண்டனர். மெதுவாகவே ஆட்டத்தை அவர்கள் தொடர்ந்தாலும், விக்கெட்கள் விழாமல் பார்த்துக் கொண்டார்கள். சண்டிமால் 7 பௌண்டரிகளுடன் 145 பந்துகளில் அரைச்சதமடித்தார்.

மதிய இடைவேளையின் பின்னர் இருவரும் வேகமாக ஓட்டங்களை எடுக்க ஆரம்பித்தனர். 231 பந்துகளை எதிர்கொண்டு 2 சிக்ஸர்கள், 13 பௌண்டரிகளுடன் சதம் அடித்தார் மத்தியூஸ். இது அவரின் 8 ஆவது சதம் என்பதுடன் 19 டெஸ்ட் போட்டிகளின் பின்னர் அடித்த சதம் என்பதும் குறிப்பிடத்தக்து.

இருவரையும் பிரிக்க இந்திய அணி கடுமையாகப் போராடியது. இணைப்பாட்டமாக 181 ஓட்டங்களை எட்டியபோது 111 ஓட்டங்களுடன் மத்தியூஸ் ஆட்டமிழந்தார்.

தேநீர் இடைவேளையின் பின்னரான ஆட்டத்தில் சமரவிக்ரம 33, றொசேன் சில்வா 0, டிக்வெல்ல 0, லக்மால் 5, கமகே 0 ஓட்டங்கள் என மளமளவென்று விக்கெட்கள் சரிந்தன.

நிலைத்து ஆடிவரும் டினேஸ் சண்டிமால் ஒரு சிக்ஸர், 18 பௌண்டரிகளுடன் 147 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காது உள்ளார். நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு இலங்கை அணி 356 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன்மூலம் பலோ - ஒன்னை இலங்கை தவிர்த்துள்ளது.

இந்திய அணியின் பந்து வீச்சில் அஸ்வின் 3, முஹமட் சமி, இஷாந்த் சர்மா, ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

## மாறாத மேற்கிந்தியா:
## நியூசிலாந்து வெற்றி



வெலிங்டன், டிசெ. 05

நியூசிலாந்திடம் இனிங்ஸ் மற்றும் 67 ஓட்டங்களால் தோல்வி கண்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி. வழக்கமான மோசமான ஆட்டமே மேற்கிந்தியத்தீவுகளின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது.

வெலிங்டன் டெஸ்ட் போட்டியின், நான்காம் நாளான நேற்று 2 விக்கெட்கள் இழப்புக்கு, 214 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்தது. பிராட்வைட் 79 ஓட்டங்களுடனும் ஷெய் ஹோப் 21 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடங்கினர்.

தொடர்ந்து அதிரடியாக ஆடிய ரர் பிராட்வைட் 8 பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 91 ஓட்டங்களை எடுத்த நிலையில் சண்ட்னர் வீசிய பந்தை பின்னால் சென்று அடிக்க முற்பட்டார். ஆனால் பந்து பின்னங்காலில் பட்டு எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர், மேற்கிந்தியத் தீவுகளின் விக்கெட்கள் மளமளவென்று சரியத் தொடங்கின. ஷெய் ஹோப், போல்ட்டின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர் பௌண்டரிகள் அடித்த ராஸ்டன் சேஸ் அதிக நேரம் நீடிக்கவில்லை. அகலப்பந்தாகச் சென்ற பந்தை தேவையின்றி அடித்தாடி விக்கெட்டை இழந்தார். அப்போது அவர் 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

உணவுக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது மேற்கிந்தியத் தீவுகள் வசம் 5 விக்கெட்கள் இருந்தன. இடைவேளையின் பின் தொடர்ந்த ஆட்டத்தில் ஒரு மணி நேரத்திலேயே அனைத்து விக்கெட்களையும் மேற்கிந்தியத் தீவுகள் இழந்தது. அப்போது அந்த அணி 319 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கிமார் ரோச், ஜேசன் ஹோல்டர், மிகுவெல் கமின்ஸ் ஆகியோர் 5 ஓவர்களில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் மட் ஹென்றி 3 விக்கெட்களையும், கிராண்ட்ஹோம், போல்ட், வோக்னர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. மேலும், கடந்த 5 வருடங்களில் சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளைத் தவிர வேறு அணிகளுடன் மேற்கிந்தியத்தீவுகள் டெஸ்ட் தொடர் எதனையும் வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தபோட்டி வரும் 9 ஆம் திகதி ஹமில்டனில் தொடங்குகிறது. (ச)

## 227 ஓட்டங்களுக்கு
## இங்கிலாந்து அவுட்




அடிலெய்டில், டிசெ. 05

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான 2-ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 227 ஓட்டங்களுக்குகளுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்துள்ளது.

அடிலெய்டில் சனிக்கிழமை தொடங்கிய ஆட்டத்தில் அவுஸ்ரேலியா தனது முதல் இனிங்ஸில் 149 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 442 ஓட்டங்கள் எடுத்தது. ஷோன் மார்ஷ் 15 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் உள்பட 126 ஓட்டங்கள், நதன் லயன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து தனது முதல் இனிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து ஞாயிற்றுக்கிழமை ஆட்டநேர முடிவில் 9.1 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 29 ஓட்டங்கள் எடுத்தது. அலெஸ்ரெயர் குக் 11, ஜேம்ஸ் வின்ஸ் ஓட்டம் எதுவுமின்றி களத்தில்இருந்தார்கள். முன்னதாக ஸ்ரோன்மேன் 18 ஓட்டங்களில் வீழ்ந்தார்.

இன்று தனது முதல் இனிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 76.1 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ஓவர்களுடன் 41 ஓட்டங்களும் குக் 37 ஓட்டங்களும் எடுத்தார்கள். அவுஸ்ரேலியத் தரப்பில் நதன் லயன் 4 விக்கெட்டுகளும் ஸ்டார்க் 3 விக்கெட்டுகளும் எடுத்து அசத்தினார்கள். மொயீன் அலி 25 ஓட்டங்களுடன் இருந்தபோது பந்துவீசிய லயன், அற்புதமாக பிடியெடுத்து அசத்தினார்.

இங்கிலாந்து அணி பலோ- ஒன் ஆனாலும், அவுஸ்ரேலியா மீண்டும் துடுப்பெடுத்தாட முடிவு செய்துள்ளது. (ச)

## இந்திய அணி அறிவிப்பு

அடிலெய்டில், டிசெ. 05

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செல்லவுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இதையடுத்து 6 ஒருநாள், 3 ருவென்ரி -20 போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

ஜனவரி 5 ஆம் திகதி முதல் 9- ஆம் திகதி வரை முதல் டெஸ்ட், ஜனவரி 13 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை 2-ஆவது டெஸ்ட் மற்றும் ஜனவரி 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை 3-ஆவது டெஸ்ட் போட்டியும் நடைபெறவுள்ளன.

இந்த டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி கடந்த வாரம் அறிவிக்கப்பட இருந்தது. ஆனால், சில காரணங்களால் அது தள்ளிப்போனது. **அணி விவரம் :** விராட் கோஹ்லி (கப்டன்), முரளி விஜய், ஷிகர் தவான், கே.எல்.ராகுல், சேத்தேஷ்வர் புஜாரா, அஜிங்க்ய ரஹானே (உப தலைவர்), ரோஹித் ஷர்மா, ரித்திமான் சாஹா (விக்கெட் காப்பாளர்), அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, பார்திவ் படேல், ஹார்திக் பாண்டியா, புவனேஸ்வர் குமார், இஷாந்த் ஷர்மா, உமேஷ் யாதவ், முகமது ஷமி, ஜஸ்ப்ரீத் பும்ரா. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 05.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.